**முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**O.S. No. 10/2007**

**Witness DW 2**

பெயர் பெரியண்ணன் த/பெ சின்னராஜ்

இன்று (17.12.2024) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

**சாட்சி திரும்ப அழைக்ககப்பட்டு 6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**சத்தியமாக சொல்கிறேன்**

எனது தந்தையார் சின்னராஜ் என்பவருக்கு 6 ஏக்கர் 76 செண்ட் பூர்வீகமாக வந்த சொத்து என்றால் சரிதான் பாக பிரிவினை வழக்கு மூலம் கிடைத்தது . எனது தந்தையார் மேற்படி பூர்வீக சொத்தில் வந்த வருமானத்தை கொண்டு மேலும் 4 ஏக்கர் 3 செண்ட் சொத்துக்கள்அவர் பெயரில் வாங்கினார் என்றால் சரிதான் . வழக்கில் கண்ட அயிட்டம் 36, 37 மனையின் எனது தந்தையார் பெயரில் அவர் வாங்கியுள்ளார் என்றால் சரிதான் . எனக்கு விவசாயம் தான் தொழில் என்றால் சரிதான் , மோட்டார் காயில் கட்டும் வேலையும் செய்கிறேன். மோட்டார் காயில் கட்டும் தொழிலுக்கு சான்றிதழ் உள்ளதா என்றால் அ.னுபவ ரீதியாகதான் செய்கிறேன் . நான் என்ன படித்துள்ளேன் என்றால் SSLC படித்துள்ளேன். எனது தந்தையாருடன் நான் விவசாயம் பார்த்து வந்தேன் என்றால் சரிதான். எனது தந்தையார் 1990 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான் . எனது தந்தையார் உயிருடன் இருந்த போதே எனது சகோதரிகளான வாதி மற்றும் 2,4,5 பிரதிவாதிகள் ஆகியோர்களுக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான் . எனது தந்தையார் உயிருடன் இருக்கும்போதே எனது பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்டது என்றால்

சரிதான். எனது பெயரில் 7 ஏக்கர் 13 செண்ட் பெறப்பட்டது என்றால் சரிதான் . எனது தந்தையாருக்கு பூர்வீகமாக வந்த சொத்து , அதில் வந்த வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் ஆகிய சொத்துக்களில் வந்த வருமானத்தை கொண்டுதான் எனது பெயரில் எனது தந்தையார் சொத்து வாங்கினார் என்றால் சரியல்ல . அந்த சொத்துக்கள் வாங்கும் அளவிற்கு எனக்கு தனிப்பட்ட வருமானம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல . எனது தந்யைார் இறந்த பிறகு 6ம் பிரதிவாதியும் நானும் கூட்டுக்குடும்பமாக இருந்து வருகிறோம் என்றால் 2004 வரை ஒன்றாக இருந்தார் அதன்பிறகு அவர் தனியாக போய்விட்டார் . 6ம் பிரதிவாதி பொறியியல் பட்டப்படிப்பு படித்துள்ளார் என்றால் சரிதான் . 1999 ம் வருடம் சவுதி அரேபியாவுக்கு வேலை நிமித்தமாக சென்றார் என்றால் சரிதான் அங்கு ஒரு 3 வருடம் வேலை செய்தார் என்றால் சரியல்ல 1 வருடம் 8 மாதம் தான் வேலை செய்தார். வெளிநாட்டிலிருந்து எனக்கு பணம் அனுப்பினார் என்றால் நான் அவர் வெளிநாடு செவ்தற்கு ஒரு லட்சம் பணம் கொடுத்தேன் அதை தான் திருப்பி கொடுத்தார் . சவுதி அரேபியாவிலிருந்து 6ம் பிரதிவாதி எனக்கு ரூ . 5,00,000/- அனுப்பியுள்ளார் என்றால் சரியல்ல . டிராக்டர், டிரெயிலர் எனது தந்தையார் பெயரில் தான் வாங்கப்பட்டு உள்ளது என்றால் சரிதான் எனது மாமனாரும் காசு கொடுத்தார் . டிராக்டர் விலை எவ்வளவு அதில் எனது மாமனார் எவ்வளவு கொடுத்தார் என்றால் ரூபாய் ஒரு லட்சத்திஆயிரம் அதில் எனது மாமனார் ரூபாய் ஐம்பாதாயிரம் கொடுத்தார் . எனது மாமனார் பணம் ரூ. 50,000/-கட்டியதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் ரசீது அவரிடம் உள்ளது . எந்த வருடத்தில் நான் வீடு கட்டினேன் என்றால் 2000 ம் வருடத்தில் கட்டினேன். 6 ம் பிரதிவாதி வெளிநாட்டிலிருந்து சம்பாதித்து அனுப்பிய பணத்தை கொண்டு தான் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. எனது முதல் மகள் பெயர் தேவசேனா என்றால் சரிதான். அவருக்கு 2002

ல் திருமணம் ஆனது என்றால் சரிதான் . யூனியன் பேங்க் ல் மேல்மாடி கட்டுவதற்காக ரூ.3,00,000/- வங்கி கடன் வாங்கினேன் என்றால் ஆரம்பத்தில் வீடு கட்டுவதற்காக தான் வாங்கினேன். அந்த பணத்தை நான் எனது மகள் திருமனத்திற்கு பயன்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. தாவா 41, 42, 43 அயிட்ட சொத்துக்கள் எனது பெயரில் கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான் அது மொத்தம் 4 ஏக்கர் வரும் என்றால் சரிதான். அந்த 3 அயிட்ட சொத்துக்ககளை விற்பனை செய்யும் போது நானும் எனது சகோதரிகளும், சகோதரரும் சேர்ந்து தான் கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

(Sd/-A.Tamilselvan)
Principal Subordinate Judge,
Villupuram